**20.2.2015**

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**சூரிய காந்தி விதை ஏலம்**

வெள்ளக்கோவில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் வியாழக்கிழமை சூரிய காந்தி விதை ஏலம் நடைபெற்றது. பழனி, ஒட்டன்சத்திரம், சோடுவார்பட்டி, ஊத்துப்பட்டி போன்ற இடங்களிலிருந்து 26 விவசாயிகள் 38 ஆயிரத்து 926 கிலோ சூரிய காந்தி விதைகளை கொண்டு வந்திருந்தனர். அதிக பட்ச விலை கிலோ ரூ. 33.40, குறைந்த பட்சம் ரூ. 30.09 என ஏலம் போனது.

**பிப்.27இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வரும் 27ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி வெளியிட்ட செய்தி: நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், வரும் 27ஆம் தேதி மாவட்ட ஆட்சியர் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடக்கிறது. விவசாய அமைப்புப் பிரதிநிதிகள், விவசாயிகள் பங்கேற்று, அரசின் திட்டங்கள் தொடர்பான ஆலோசனை, புகார், கோரிக்கை தொடர்பாக மனு அளிக்கலாம். நிலம் தொடர்பான கோரிக்கைகளை, வரும் 25ஆம் தேதி மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் நடக்கும் கூட்டத்தில் பங்கேற்றுத் தெரிவிக்கலாம்.

**50 சத மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள், உபகரணங்கள் அளிப்பு**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வேளாண் இயந்திரங்கள், உபகரணங்கள் 50சத மானிய விலையில் வழங்கப்படும் என, கிருஷ்ணகிரி வேளாண்

பொறியியல் துறை செயற்பொறியாளர் வேணுகோபால் தெரிவித்தார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2014 - 15-ஆம் நிதியாண்டில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், உற்பத்திச் செலவைக் குறைக்கவும், வேளாண் உற்பத்தியை அதிகரிக்கவும், வேளாண் இயந்திரங்கள், நவீன கருவிகள் பயன்பாட்டை அதிகரிக்கும் வகையில், வேளாண், தோட்டக்கலை இயந்திரங்கள், உபகரணங்களுக்கு தாழ்த்தப்பட்ட, பழங்குடி பிரிவைச் சேர்ந்த விவசாயிகளுக்கு அதிகபட்சமாக 50 சத மானியத்தில் வேளாண் பொறியியல் துறை மூலம் வழங்கப்பட உள்ளது. இதில், பலவகை தானிய கதிர் அடிக்கும் இயந்திரம், களையெடுக்கும் இயந்திரம் (8 குதிரைத்திறனுக்கு கீழ்), விசைத்தெளிப்பான், பவர்டிரில்லர் (8 குதிரைத்திறனுக்கு மேல்), உழுவை கருவிகள், டிராக்டர், பவர் டிரில்லர் மூலம் இயங்கும் உபகரணங்கள், சுழல் கலப்பை, தீவனப்புல் வெட்டும் கருவி, மரம் அறுக்கும் கருவி ஆகியவை வழங்கப்படும். இந்தக் கருவிகளை தாழ்த்தப்பட்ட, பழங்குடி பிரிவைச் சேர்ந்த விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்க கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு ரூ. 8.82 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. எனவே, தகுதி உள்ள விவசாயிகள் தங்களது பெயர், முகவரி, சர்வே எண், சிட்டா, அடங்கல் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்க வேண்டும். மேலும், விவரங்களுக்கு கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, போச்சம்பள்ளி ஆகிய வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள் உதவிச் செயற்பொறியாளர், வேளாண் பொறியியல் துறை, 311, பிரிவு 1, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், மகளிர் காவல் நிலையம் அருகில், கிருஷ்ணகிரி என்ற முகவரியிலும், ஒசூர், தேன்கனிக்கோட்டை வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள் உதவிச் செயற்பொறியாளர், வேளாண் பொறியியல் துறை, ராயக்கோட்டை சாலை, சானசந்திரம், ஒசூர் என்ற முகவரியிலும் தொடர்பு கொண்டு பயன்பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோழி வளர்ப்பு பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்

பெரம்பலூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் கிராமிய சுய வேலைவாய்ப்புப் பயிற்சி மையத்தில், கோழி வளர்ப்பு மற்றும் பராமரிப்புப் பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் விழா அண்மையில் நடைபெற்றது. பெரம்பலூரில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் கிராமிய சுய வேலைவாய்ப்புப் பயிற்சி மையத்தில் பெண்களுக்கான தையல் கலைப் பயிற்சி, மெகந்தி, ஆயத்த ஆடை வடிவமைப்பு, எம்பிராய்டரி பயிற்சி உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகளும், ஆண்களுக்கான செல்போன் பழுது நீக்கும் பயிற்சி, புகைப்பட கலைஞர்களுக்கான பயிற்சி, மோட்டார் காயில் கட்டும் பயிற்சி, கார் ஓட்டுநர் பயிற்சி உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் இலவசமாக அளிக்கப்பட்டன. இப்பயிற்சி பெற, பெரம்பலூர் மாவட்டத்தை சேந்தவராகவும், வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளவர்களாகவும், சுயதொழில் தொடங்குவதில் ஆர்வம் உள்ளோருக்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் கிராமிய சுய வேலைவாய்ப்புப் பயிற்சி மையத்தில் கோழி வளர்ப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான 6 நாள் பயிற்சி அண்மையில் அளிக்கப்பட்டது. இதில் பங்கேற்று பயிற்சி பெற்ற 19 நபர்களுக்கு பெரம்பலூர் மாவட்ட கால்நடைத் துறை கூடுதல் இயக்குநர் மருத்துவர் தங்கராஜ் சான்றிதழ் வழங்கினார். இந்நிகழ்ச்சி யில் உதவி இயக்குநர் மனோகரன், சிறப்பு மருத்துவர் மோகன், பயிற்சியாளர் சுப்ரமணியம் உள்பட பலர் பங்கேற்றனர்.

## களக்குடியில் கால்நடை வளர்ப்பு பண்ணைப் பள்ளி நிறைவு

திருநெல்வேலியை அடுத்த களக்குடியில் கால்நடை வளர்ப்பு குறித்து பொதுமக்களுக்கு பயிற்சியளிக்கும் வகையில் நடைபெற்ற பண்ணைப் பள்ளி வியாழக்கிழமை நிறைவடைந்தது. திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி வேளாண்மை தொழில்நுட்ப முகமை ஆகியவை இணைந்து கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையிலும், கால்நடை வளர்ப்போருக்கு

வழிகாட்டவும் பண்ணைப் பள்ளி வகுப்புகளை கிராமம்தோறும் நடத்தி வருகின்றன. இதன்படி, நவீன கால்நடை வளர்ப்பு உத்திகள் குறித்த பண்ணைப் பள்ளி பயிற்சி வகுப்பு கடந்த 6 வாரமாக நடைபெற்றது. மானூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உள்பட்ட களக்குடி கிராமத்தில் 25 முன்னோடி விவசாயிகளைத் தேர்வுசெய்து புதன்கிழமைதோறும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. கறவை மாடுகளுக்கான அடர் தீவனக் கலவை தயாரிப்பு, ஊறுகாய் புல் தயாரிப்பு, பசுந்தீவனம் தயாரித்தல், கம்பு நேப்பியர் ஒட்டுப்புல் சாகுபடி, தீவனப் பயிர் சாகுபடி, பால் கறவை இயந்திரம், ஆடு, மாடுகளுக்கான குடற்புழு நீக்கம், மருந்துக்குளியல், நாட்டுக் கோழிகளுக்கு வெள்ளைக் கழிச்சல் தடுப்பூசி, குருணை வடிவ தடுப்பு மருந்து ஆகியவை குறித்து விளக்கப் பாடங்களுடன் பேராசிரியர்கள் வகுப்பு நடத்தினர். இதன் நிறைவு விழா, வியாழக்கிழமை நடைபெற்றது. விழாவுக்கு தலைமை வகித்து கல்லூரி முதல்வர் சே. பிரதாபன் பேசியது: கிராமப்புறங்களில் உள்ள கால்நடை வளர்ப்போர், நவீன தொழில்நுட்ப முறைகளை அறிந்துகொள்ள ஏதுவாக பண்ணைப் பள்ளிகள் அமைந்துள்ளன. மாவட்டம் முழுவதும் இத்தகைய பள்ளிகள் தொடர்ந்து நடத்தப்படும். கால்நடை வளர்ப்போர், விவசாயிகள் ஆர்வமுடன் பங்கேற்க வேண்டும் என்றார் அவர். தொடர்ந்து, பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு பயிற்சிக் கையேடு, சான்றிதழ்களை அவர் வழங்கினார். மேலும், விவசாயிகளுக்கு இடுபொருள்களான தனுவாசு தாதுக் கலவை மற்றும் மாடு, ஆடு, கோழி வளர்ப்பு குறித்த விடியோ குறுந்தகடுகளும் வழங்கப்பட்டன. வேளாண்மை உதவி இயக்குநர் வே. சரஸ்வதி, கால்நடை விரிவாக்க கல்வித்துறைப் பேராசிரியர் சி. மணிவண்ணன், உதவிப் பேராசிரியர் சே. செந்தில்குமார் ஆகியோர் பேசினர். களக்குடி கிராம விவசாயிகள், வேளாண் அலுவலர்கள், கல்லூரி ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### 1.61 லட்சம் மெட்ரிக் டன் நெல்தஞ்சையில் நேரடி கொள்முதல்

தஞ்சாவூர்:தஞ்சாவூர் மாவட்டத்தில், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் விவசாயிகளிடமிருந்து கடந்த, 17ம் தேதி வரை, ஒரு லட்சத்து, 61 ஆயிரத்து, 539 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்தில், சம்பா மற்றும் தாளடி பருவத்தில், சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற் பயிர்கள் அறுவடை செய்யப்பட்டு வருகிறது. இதையடுத்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில், விவசாயிகளிடமிருந்து அரசு நிர்ணயித்துள்ள விலைக்கு, நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இதற்காக மாவட்டம் முழுவதும், 387 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது. இவை தவிர, ஒன்பது நடமாடும் நெல் கொள்முதல் நிலையங்கள் இயங்கி வருகிறது. இவற்றின் மூலம், விவசாயிகளிடமிருந்து கடந்த, 17ம் தேதி வரை, ஒரு லட்சத்து, 61 ஆயிரத்து, 539 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப் பட்டுள்ளது. இவற்றில், 11 ஆயிரத்து, 111 மெட்ரிக் டன் நெல் திருவள்ளூர், திருச்சி மற்றும் புதுக்கோட்டைக்கு ரயில் மற்றும் லாரிகள் மூலமாக அனுப்பப்பட்டுள்ளது. தவிர, எட்டாயிரம் மெட்ரிக் டன் நெல் அரவைக்காக, தஞ்சை மாவட்டத்தில் உள்ள நவீன அரிசி ஆலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு உரிய தொகை, விவசாயிகளுக்கு உடனுக்குடன் பட்டுவாடா செய்யப்பட்டு வருவதாக, மாவட்ட கலெக்டர் சுப்பையன் தெரிவித்தார்.

## முடிவல்ல... ஆரம்பம்...! பசுந்தாள் உரமாகிறது தேக்கு

ஆர்.கே.பேட்டை: நெல் நடவுக்கு தயார் செய்யப்படும் வயல்களில், தேக்கு இலைகளை பசுந்தாள் உரமாக, விவசாயிகள் பயன்படுத்து கின்றனர். கோடைக்கு முன்பாக, தேக்கு மரங்களில் உள்ள பக்கக் கிளைகள் வெட்டப்படுகின்றன. இவ்வாறு வெட்டப்படும் தேக்கு மரக்கிளைகளில் உள்ள இலைகள், பசுந்தாள் உரமாக பயன்படுத்தப் படுகிறது. இதனால், தேக்கு மரம், சீரான வளர்ச்சி பெறுகிறது. நெற்பயிர், தழைச்சத்தால் ஊட்டம் பெறுகிறது. விவசாயிகளுக்கும் ரசாயன உரம் பயன்படுத்த வேண்டிய செலவு குறைகிறது. தேக்கு மர இலைகள் மூலம், பசுந்தாள் உரம் விவசாயிகளுக்கு எளிதாகக் கிடைக்கிறது. கோடையில், தேக்கு மர இலைகளால், தண்ணீர் அதிகளவில் ஆவியாவதை தடுக்கவும்; மரங்கள் நேராக வளரவும் வகை செய்கிறது. தற்போது மரக் கிளைகளை வெட்டும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இதன் மூலம் கிடைக்கும் இலைகள், தை மாத அறுவடைக்குப் பின், அடுத்த பருவத்திற்கு வயலை தயார் செய்யும் விவசாயிகளுக்கு, பசுந்தாள் உரமாக பயன்படுகிறது. இவ்வாறாக, தேக்கு மரத்தின் பக்கக் கிளையை வெட்டுவது, இரண்டு வித நன்மையைத் தருகிறது.

## கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

திருவள்ளூர்: திருவள்ளூர் மாவட்டத்தில், கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாம், மார்ச் 1ம் தேதி துவங்குகிறது. திருவள்ளூர் மாவட்டத்தில், கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாம், அனைத்து கிராமங்களிலும் மார்ச் 1ம் தேதி துவங்கி, தொடர்ந்து 21 நாட்களுக்கு நடத்தப்படஉள்ளது.பொதுமக்கள், தங்களது கால்நடை

களுக்கு தடுப்பூசி போட்டு பயனடைய வேண்டுமாறு, ஆட்சியர் வீரராகவ ராவ் கேட்டு கொண்டுள்ளார்.

## ரூ.85 லட்சம்மதிப்பில் கொப்பரை தேங்காய் ஏலம்

பெருந்துறை:பெருந்துறை, வேளா ண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த ஏலத்தில், 85 லட்சம் ரூபாய் மதிப்பில் கொப்பரை தேங்காய் ஏலம் போனது.கடந்த புதன் அன்று நடந்த ஏலத்தில், விவசாயிகள் சார்பில், 1,909 மூட்டைகளில், 90,000 கிலோ கொப்பரையை கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தர கொப்பரை குறைந்தபட்ச விலையாக கிலோ, 94.80 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 99.25 ரூபாய்க்கும் விற்பனையானது. இரண்டாம் தர கொப்பரை குறைந்தபட்ச விலையாக கிலோ, 54.25 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 93.90 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, 85 லட்சம் ரூபாய்க்கு ஏலம் மூலமாக விற்பனையானது என்று சங்கத் தலைவர் அருள்ஜோதி செல்வராஜ் தெரிவித்தார்.

## பர்லியாரில் துரியன் பழ சீசன் துவக்கம்

குன்னூர் : குன்னூர் அருகே பர்லியாரில் உள்ள, தனியார் தோட்டங் களில், துரியன் பழ சீசன் துவங்கியுள்ளது. நீலகிரி மாவட்டம் பர்லியார் பழப்பண்ணையில், பலா, மங்குஸ்தான், துரியன், உட்பட பல பழ வகைகளும், லவங்கம், பட்டை, கிராம்பு, ஜாதிக்காய் போன்ற பணப்பயிர்களும் விளைவிக்கப்படுகின்றன. இதில், 'குழந்தை பாக்கியத்துக்கு உகந்த பழம்' என, கருதப்படும், துரியன் பழத்திற்கு அதிக மவுசு உண்டு.இங்குள்ள பழமை வாய்ந்த, 36 துரியன் மரங்களில், ஏப்ரல் முதல் செப்டம்பர் இரண்டாவது வாரம் வரையில், துரியன் பழங்கள் அதிகளவில் விளையும்.இந்நிலையில், அப்பகுதி தனியார் தோட்டங்களில், தற்போது துரியன் பழங்கள், அதிகளவில்

விளைந்துள்ளன.வெளிமார்க்கெட்டில், ஒரு கிலோ பழம், 650 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

## காளான் வளர்ப்பு பயிற்சி

கோத்தகிரி : கோத்தகிரி உபகோட்டத்துக்கு உட்பட்ட பட்டகொரை கிராமத்தில், வேளாண்மை தொழிற்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ், அம்மா பண்ணை மகளிர் குழுக்களுக்கு, காளான் வளர்ப்பு குறித்த திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் நடந்தது.ஊர் தலைவர் சிக்கன் தலைமை வகித்தார். தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் உதவி பேராசிரியை முனைவர். மாலதி, காளான் வளர்ப்பு முறை குறித்து, செயல் விளக்கத்துடன், எடுத்துரைத்தார். இதில், 40 விவசாயிகள் பங்கேற்றனர். துணை வேளாண்மை அலுவலர் (பொ) ரமேஷ் நன்றி கூறினார். வேளாண்மை தொழிற்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ், தரமான உருளைக் கிழங்கு விதை உற்பத்தி குறித்து, மாவட்ட அளவிலான பயிற்சி முகாம், முத்தோரை மத்திய உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலையத்தில் நடந்தது.ஆராய்ச்சி நிலைய தலைவர் வெங்கடாச்சலம் தரமான உருளை கிழங்கு விதை உற்பத்தி குறித்து விளக்கம் அளித்தார். தொழிற்நுட்ப அலுவலர் ராஜேந்திரன், உருளைக் கிழங்கு சாகுபடி, நோய் தாக்குதல், நோய்களில் இருந்து பயிரை காப்பாற்றும் முறை குறித்து விளக்கினார்.

## கொய்யா மகசூல் மூன்று மடங்கு அதிகரிப்பு! அடர்நடவு முறை கைகொடுத்ததால்

திண்டுக்கல் : ""கொய்யா சாகுபடியில் உயர் தொழில்நுட்ப அடர் நடவு முறையை கடைபிடித்தால், மூன்று மடங்கு மகசூல் பெறலாம்'', என தகவல் வெளியாகியுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் பழநி, பாப்பம்பட்டி, அய்யம்பாளையம், நத்தம், சாணார்பட்டி, ஒட்டன்சத்திரம் உள்ளிட்ட பகுதிகளில் 1,768 எக்டேரில் கொய்யா சாகுபடி

செய்யப்படுகிறது. அதிகளவில் கால்சியம் சத்துக்கள் கொய்யா பழங்களில் உள்ளதால், மக்களிடம் கொய்யா பழங்களுக்கு நல்ல வரவேற்பு உள்ளது. சாதாரண கொய்யா நடவுமுறையில் 18 க்கு 18 அடி இடைவெளியில் நடவு செய்கின்றனர். அதுவே அடர் நடவு முறையில் 10க்கு 10 அடி இடைவெளியில் நடவு செய்து, ஒரு ஏக்கரில் மூன்று மடங்கு கொய்யா மகசூல் கிடைக்கிறது. இதனால் ஏராளமான விவசாயிகள் அடர் நடவு முறையை பின்பற்ற ஆரம்பித்துள்ளனர். பழநி தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் பழனிச்சாமி கூறியதாவது: சாதாரண கொய்யாவை 14 முதல் 18 அடி இடைவெளியில் நடவு செய்வர். இதில் ஏக்கருக்கு 195 கொய்யா செடிகள் நடலாம். உயர் தொழில்நுட்பமான அடர் நடவில் 1111 செடிகள் நடலாம். நடவு செய்த 2 ஆண்டுகளில் பயன்தரும். இம்முறையில் வேர்களுக்கும், செடிகளுக்கும் பாதிப்பு எதுவும் வராது. சாதாரண நடவில் ஒராண்டில் ஒரு மரத்தில் 5 முதல் 10 கிலோ காய்கள் கிடைக்கும். அதுவே அடர் நடவு முறையில் ஓராண்டில் 30 கிலோ கிடைக்கும். சொட்டுநீர் பாசனம் பயன்படுத்தினால் சீராக செடிகளின் வேர்களுக்கு தண்ணீர் கிடைக்கும். அதனால் செடிகள் அடர்ந்து வளரும், என்றார்.

## மலர் கண்காட்சியில் ஒன்றரை கோடி மலர்கள்

கொடைக்கானல் : கொடைக்கானல் தோட்டக்கலை துறையில் உள்ள பிரையன்ட் பார்க்கில் 54 வது மலர் கண்காட்சியையொட்டி, மூன்று கட்டங்களாக பிரித்து தோட்டக்கலை பணியாளர்கள் பூச்செடிகளை நடவு செய்து வருகின்றனர். கொடைக்கானல் சீதோஷ்ண நிலைக்கு ஏற்ற மலர் செடிகளை பெங்களூர் மற்றும் ஊட்டியிலிருந்து வருவித்து செடிகளை நடவு செய்து வருகின்றனர். இரண்டாம் கட்ட பணியில் 17 வகையான டேலியா வகைகளை கல்கத்தாவில் இருந்து வரவழைத் நடவு செய்யப்பட்டுள்ளது. மலர் செடிகளை பனியிலிருந்து காக்க நிழல் போர்வை அமைத்து பாதுகாக்கப்படுகிறது. தற்போது மூன்றாம் கட்ட

நடவு பணிகளுக்கு 17 வகையான மலர் செடிகள் வந்து நடவு செய்யப்பட்டு வருகின்றது. கோலியாஸ், ஆப்ரிக்கன் மேரி கோல்டு (ஆரஞ்சு மற்றும் மஞ்சள்) , ஆன்டிரய்னம், (நெட்டை மற்றும் குட்டை), ஆஸ்டர், டெல்பீனியம், என 17 வகை வீரிய ரக பூக்கள் பூத்து குலுங்க உள்ளன. மொத்தம் மூன்றரை லட்சம் நாற்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளது. ரோஸ் வகைகளில் 742 செடிகள் நடவு செய்யப்பட்டு 12 கலர்களில் பூக்கும். மேலும் 5000 பூந்தொட்டிகளில் பூக்கள் அடுக்கி அலங்கரிக்கப்படும். ஏப்ரல் முதல் வாரத்தில் சுற்றுலா பயணிகள் கண்டுகளிக்க இசை ஊற்று, கூடுதலான பார்வைநேரம், மின் விளக்குகளால் அலங்காரம் என பூங்கா பூக்களால் ஜொலிக்க உள்ளது. இதனை தோட்டக்கலை இயக்குனர் பாண்டி, எபன் ஞானராஜ் தெரிவித்தனர்.

## <u>விவசாயத்தை காக்கும் குச்சிப் பூச்சி</u>

தாண்டிக்குடி : தாண்டிக்குடி மலைப்பகுதியில் விவசாயப் பயிர்களை பாதிக்கும் பூச்சிகளை அழித்து, விவசாயிகளின் நண்பனாக குச்சிப் பூச்சி நன்மை செய்கிறது. திண்டுக்கல் மாவட்டம் தாண்டிக்குடி மலைப்பகுதி யில் அடர்த்தியான மரக்கூட்டங்கள் உள்ள சோலைக்காடுகளில் இவ்வகை குச்சிப் பூச்சிகள் வாழ்கின்றன. காய்ந்த குச்சி போன்ற தோற்றத்தை உடைய இப்பூச்சியை காண்பது அறிது. தன்னை மற்ற உயிரினங்களிடமிருந்து காத்துக்கொள்ள ஏதுவான உடலமைப்பு பெற்றுள்ளன. ஏனைய பூச்சிகள் இதை எளிதில் அடையாளம் காண முடியாத நிலையில் இவற்றிடம் இரையாகின்றன. விவசாயத்திற்கு தீங்கிழைக்கும் புழு, பூச்சிகளை அழித்து விவசாயப் பயிர்கள் செழுமை பெற குச்சிப் பூச்சி காரணமாக அமைகிறது. இப்பூச்சிகளில் ஏராளமான வகை உள்ளன. மேற்கு தொடர்ச்சி மலையில் அடர்த்தியான மரக்கூட்டங்கள் மற்றும் பசுமை மாறாக் காடுகளில் இதன் எண்ணிக்கை அதிகளவு இருக்கும் என பூச்சியியல் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

## பெரியகுளம் தாலுகாவில் நெல் அறுவடைக்கு தயார்

தேவதானப்பட்டி : பெரியகுளம் தாலுகாவில் மூன்று ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் முதல் போக நெல்சாகுபடி அறுவடைக்கு தயாராக உள்ளது.

பெரியகுளம் வராகநதியில் வரும் நீரை ஆதாரமாக கொண்டு ஜெயமங்கலம் வேட்டுவன்குளம், குள்ளப் புரம் பெரியகண்மாய், சிந்துவம்பட்டி ஒட்டக்குளம், சில்வார்பட்டி சிறுகுளம், நல்லகருப்பன்பட்டி நாரணன்குளம் கண்மாய்கள் நிரப்பப்படுகிறது. இதன் மூலம் 3 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் முதல்போக நெல்சாகுபடி நடந்து வருகிறது. கடந்த 2 ஆண்டுகளில் போதிய அளவு பருவமழை பெய்யவில்லை. இதனால் முதல்போக நெல் சாகுபடியை விவசாயிகள் தவிர்ந்து வந்தனர். இந் நிலையில் நடப்பு பருவத்தில் ஓரளவிற்கு மழை பெய்தது. இதனால் வராகநதியில் நீர் வரத்து ஏற்பட்டு கண்மாய்கள் நிறைந்தன. இதனால் இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு முதல்போக சாகுபடி நடந்தது. வடுகபட்டி, மேல்மங்கலம் கிராமங்களில் நீர்வரத்து வாய்க்கால் நீரை ஆதாரமாக கொண்டு நெல்சாகுபடி பணி நடந்தது. தற்போது நெல் வயல்கள்அனைத்தும் அறுவடைக்கு தயாராக உள்ளன. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

## சிவகங்கைக்கு குண்டு வத்தல் வரத்து விளைச்சல் அதிகரிப்பால் அறுவடை அதிகரிப்பு!

சிவகங்கை : குண்டு மிளகாய் விளைச்சல் பெருக்கத்தால் சிவகங்கை மார்க்கெட்டிற்கு குண்டு வத்தல் வரத்து அதிகரித்துள்ளது. சிவகங்கை அருகே இளையான்குடி, திருப்புவனம், சிங்கம்புணரி பகுதியில் 2 ஆயிரம் எக்டேரில் மிளகாய் பயிரிட்டுள்ளனர். ராமநாதபுரம் மாவட்டத்தில் ஆர்.எஸ்.,மங்கலம், ஆனந்தூர், காஞ்சிரம் உள்ளிட்ட பகுதிகளில் குண்டு மிளகாய் விளைச்சல் அதிகரித்துள்ளன. கடந்த 3 ஆண்டாக மழையின்றி மிளகாய் விளைச்சலுக்கு தண்ணீரின்றிவிவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.

நடப்பாண்டு மழை நன்கு பெய்துவிட்டதால் விவசாயிகள் குண்டு மிளகாய் விளைச்சலில் ஆர்வம் செலுத்தினர். தற்போது, குண்டு வத்தல் வரத்து அதிகரிக்க துவங்கிவிட்டன. இவ்விரு மாவட்டங்களில் விளையும் குண்டு மிளகாயை பறித்து, வத்தல் ஆக மாற்றி விவசாயிகள் விற்பனைக்கு அனுப்புகின்றனர். சிவகங்கை குண்டு வத்தல் மொத்த வியாபாரி சுந்தரமகாலிங்கம் கூறும்போது: மார்க்கெட்டிற்கு ஜன.,30க்கு பின் குண்டு வத்தல் வரத்து துவங்கியுள்ளன. இன்னும் அறுவடை செய்தால் வரத்து அதிகரிக்கும். புது வத்தல் குவிண்டால் (100 கிலோ) ரூ.12,000க்கும், பழைய வத்தல் ரூ.7,500க்கும் விற்கிறது. புது வத்தல் வரத்து அதிகரிக்கும் பட்சத்தில் விலை குறையும், என்றார்.

## <u>கடந்தாண்டை விட மஞ்சள் விலை உயர்வு உடனடி விற்பனைக்கு விவசாயிகள் ஆர்வம்</u>

தர்மபுரி :கடந்தாண்டை விட, மஞ்சள் விலை தற்போது உயர்ந்துள்ளதால், விவசாயிகள் அறுவடை செய்தவுடன் மஞ்சளை விற்பனை செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். தர்மபுரி மாவட்டத்தில், சாகுபடி செய்யப் படும் முக்கிய பணப்பயிர்களில் ஒன்றாக மஞ்சள் உள்ளது. இறவை பாசன பயிரான மஞ்சள், தர்மபுரி, பாலக்கோடு, மாரண்ட ஹள்ளி, காரிமங்கலம், பென்னாகரம், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி உட்பட, மாவட்டம் முழுவதும், விரலி மற்றும் கிழங்கு மஞ்சள், 8,000 ஹெக்டேருக்கு மேல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.மாவட்டத்தில், தென்மேற்கு பருவ மழை கை கொடுக்காத நிலையில், வடகிழக்கு பருவமழை ஓரளவுக்கு, விவசாயிகளுக்கு கை கொடுத்தது. இதன் காரணமாக, நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்தது. மஞ்சள் சாகுபடி செய்யப்பட்ட பகுதிகளில், சிரமம் இன்றி பாசன வசதி செய்தனர். பல பகுதிகளில், சொட்டு நீர் மூலம் விவசாயிகள் மஞ்சளுக்கு பாசன வசதி செய்து வந்தனர். இந்நிலையில், தர்மபுரி மாவட்டம் உட்பட, தமிழகம் முழுவதும், சில தினங்களாக, மஞ்சள் அறுவடை தொடங்கி

யுள்ளது. கடந்த, இரண்டு ஆண்டுகளை விட தற்போது, மஞ்சள் விலை சற்று கூடுதலாக உள்ளதால், பெரும்பாலான விவசாயிகள், மஞ்சளை அறுவடை செய்தவுடன், அவற்றை, வேகவும், காயவும் வைத்து உடனடியாக விற்பனை செய்ய ஆர்வம் காட்டுகின்றனர். இது குறித்து, சவுளூரை சேர்ந்த விவசாயி சுப்பிரமணி கூறியதாவது: தர்மபுரி மாவட்டத்தில், 10 ஆயிரம் ஹெக்டேருக்கு மேல், கடந்த காலங்களில், மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. சில ஆண்டுகளுக்கு முன், தங்கத்தை விட மஞ்சளின் விலை அதிகமாக இருந்தது. இதனால், தமிழகத்தின், பல்வேறு பகுதிகளில், விவசாயிகள் அதிகளவில், மஞ்சள் சாகுபடியில் ஈடுபட்டனர். இந்நிலையில், மஞ்சள் வரத்து அதிகரித்ததின் காரணமாக, விலை சரிவு ஏற்பட்டது. அறுவடை செலவுக்கு கூட மஞ்சள் விலை கிடைக்காததால், பல விவசாயிகள், மஞ்சளை அறுவடை செய்யாத நிலை ஏற்பட்டது. இதையடுத்து, தமிழகத்தில் மஞ்சள் சாகுபடி சற்று குறைய துவங்கியதையடுத்து, மஞ்சள் விலையிலும், சற்று மாற்றம் தொடர்ந்து வந்தது. இந்தாண்டு, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் சில தினங்களாக, மஞ்சள் அறுவவை தொடங்கியுள்ளது. ஈரோடு மாவட்டத்தை விட சேலம் மாவட்டத்தில், மஞ்சள் விலை தற்போது, கூடுதலாக, உள்ளது.சேலம் மஞ்சள் மார்க்கெட்டில், விரலி மஞ்சள் அதிகபட்ச விலையாக, 9,019 ரூபாய், கிழங்கு மஞ்சள் அதிகபட்ச விலையாக, 8,019 ரூபாய் என, விற்பனை செய்யப்படுகிறது. இதனால், இப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் மஞ்சளை அறுவடை செய்தவுடன், உடனடியாக விற்பனை செய்து வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

**<u>புதுகையில் மாவட்ட அளவிலான பயிர் விளைச்சல் போட்டி</u>**

புதுக்கோட்டை:புதுக்கோட்டை மாவட்டம், பெருநாவலூர் கிராமத்தில் வோளாண்மைத்துறையின் சார்பில், மாவட்ட அளவிலான பயிர் விளைச்சல் போட்டி நடந்தது.கலெக்டர் கணேஷ்கூறியதாவது.தமிழக அரசு, வேளாண்மைத்துறையில் அறிமுகப்படுத்தி வரும் நவீன தொழில்

நுட்பத்தை கொண்டு, திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்ப முறையில் பயிர் விளைவிக்கும் விவசாயிகளுக்கு, மாவட்ட அளவிலான பயிர் விளைச்சல் போட்டி, அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று வருகிறது.அதன்படி, ஆவுடையார்கோவில், பெருநாவலூர் கிராமத்தில் பக்ருதீன் அலி என்பவரின் வயலில் திருந்திய நெல் சாகுபடி செய்த வயலில், அறுவடை பணி ஆய்வு செய்யப்பட்டது.போட்டியில், திருந்திய நெல் சாகுபடியை கடைபிடித்து, அதிக உற்பத்தி திறன் பெறும் விவசாயிக்கு, முதல் பரிசு, 15 ஆயிரம் ரூபாயும், இரண்டாம் பரிசு, 10 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படவுள்ளது. மேலும், மாவட்ட அளவிலான பயிர் விளைச்சல் போட்டி, 24ம் தேதி அறந்தாங்கி வட்டாரத்திலும், 25ம் தேதி அரிமளம் மற்றும் அன்னவாசல் வட்டாரத்திலும், மார்ச், 5ம் தேதி கந்தர்வக்கோட்டை மற்றும் திருவரங்குளம் வட்டாரத்திலும், மார்ச், 15ம் தேதி குன்னாண்டார்கோவில் வட்டாரத்திலும், 16ம் தேதி பொன்னமராவதி வட்டாரத்திலும் நடைபெறவுள்ளது. மார்ச், 20ம் தேதி திருமயம் வட்டாரத்திலும் நடைபெறவுள்ளது. எனவே, விவசாயிகள் நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும், என்றார். ஆய்வின் போது, வேளாண்மை இணை இயக்குனர் ஷாஜகான், நேர்முக உதவியாளர் (வேளாண்மை) நாகந்திரன், உதவி இயக்குனர்கள் திருப்பதி (தரக்கட்டுப்பாடு), அடைக்கப்பன், வேளாண்மை அலுவலர் (தரக்கட்டுப்பாடு) ஆதிலெட்சுமி, விவசாயிகளின் பிரதிநிதிகள் கலியபெருமாள்,ராஜப்பாபங்கேற்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## மார்ச், ஏப்ரல் மாதங்களில் கேழ்வரகை விற்க பரிந்துரை குவிண்டாலுக்கு ரூ.2,000 கிடைக்கும்



திருச்சி: தமிழ்நாட்டில், 2012-13ல், கேழ்வரகு 0.70 லட்சம் எக்டர் அளவில் பயிரிடப்பட்டு, 1.38 லட்சம் டன்கள் உற்பத்தியானது. கிருஷ்ணகிரி (58 சதவீதம்), தருமபுரி (15 சதவீதம்), வேலுரர் (8 சதவீதம்), சேலம் (7 சதவீதம்) மற்றும் ஈரோடு (7 சதவீதம்) ஆகிய மாவட்டங்களில் அதிகம் பயிரிடப்படுகிறது. இதுகுறித்து திருச்சி வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மைய துணை இயக்குனர் சந்திரசேகர் கூறுகை யில், தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தில் உள்ள வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மைய அலுவலகம் கடந்த 10 வருடமாக திண்டிவனம் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் நிலவிய கேழ்வரகு விலையை ஆராய்ந்தது. அதன் அடிப்படையில் 2015 மார்ச்- ஏப்ரல் மாதங்களில் கேழ்வரகு குவிண்டாலுக்கு ரூ.1,800 முதல் ரூ.2,000 வரை விலை கிடைக்கும். எனவே, தமிழக விவசாயிகள் அறுவடை யாகும் கேழ்வரகை இருப்பு வைத்து வரும் மார்ச்- ஏப்ரல் மாதங்களில் விற்கலாம்' என்றார்.

## விவசாய உற்பத்தியாளர் கம்பெனி துவக்க விழா

விருத்தாசலம், : விருத்தாசலத்தில் திருமுதுகுன்றம் விவசாயிகள் கம்பெனி லிமிட் துவக்க விழா வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடந்தது. கம்பெனி நிர்வாக இயக்குனர் வேணுகோபால் தலைமை தாங்கினார்.

கடலூர் நபார்டு உதவி பொது மேலாளர் ராஜகோபாலன், வேளாண்மை துறை இணை இயக்குனர் ஹரிதாஸ், வேளாண்மை விற்பனைத்துறை துணை இயக்குனர் கோமதி, வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர் மோதிலால் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கலெக்டர் சுரேஷ் குமார் கலந்துகொண்டு நிறுவனத்தை துவக்கிவைத்து பேசினார். ஒன்றிய சேர்மன்கள் விருத்தாசலம் சுந்தரராஜன், கம்மாபுரம் செல்வராஜ், ஊராட்சி மன்றதலைவர்கள் புதுக்கூரைப்பேட்டை ராமதாஸ், வண்ணான் குடிகாடு மணிகண்டன், சாத்துக்குடல் முல்லைநாதன், தொழூர் ஜெயராமன், கீழ்பாதி அமிர்தலிங்கம், கடலூர் மாவட்ட உழவர் மன்ற செயலாளர் கார்மாங்குடி வெங்கடேசன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## <u>விவசாயிகள் குறைதீர் கூட்டம்</u>

நாமக்கல், : நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 27ம் தேதி காலை 11 மணிக்கு கலெக்டர் தட்சிணாமூர்த்தி தலைமையில் நடக்கிறது. இதில், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்க பிரதிநிதி கள் கலந்து கொண்டு தங்களது குறைகளை தெரிவிக்கலாம் என கலெக்டர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## <u>அரூர் பகுதியில் புளி விளைச்சல் அமோகம்</u>

அரூர், : அரூர் சுற்றுவட்டார பகுதிகளில், நடப்பாண்டு புளி விளைச்சல் அதிகரித்துள்ளது. தர்மபுரி மாவட்டம் அரூர், கோட்டப்பட்டி, சிட்லிங், நரிப்பள்ளி, தண்டா, மொரப்பூர், கடத்தூர், நெடுஞ்சாலை ஓரங்களில் புளிய மரங்கள் உள்ளது. தற்போது புளியமரங்களில் கொத்து கொத்தாக புளி காய்த்துள்ளது. ஒருங்கிணைந்த தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தின் புளி விளைச்சல், தமிழகத்தின் 80 சதவீத தேவையை நிறைவு செய்யும் அளவிற்கு உள்ளது. அரூர் பகுதியில் உள்ள சிட்லிங், கோட்டப்பட்டி

மலை பகுதியில் விளையும் புளிக்கு எப்போதும் தனி மவுசு உள்ளது. கடந்த ஆண்டு கிலோ புளி தி50 முதல் தி70 வரை விற்பனை செய்யப் பட்டது. இந்த ஆண்டு மகசூல் நன்றாக இருப்பதால், விலை குறைய வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

## மாசி அமாவாசையையொட்டி சேலம் உழவர் சந்தைகளில் 202 டன் காய்கறிகள் விற்பனை

சேலம், : மாசி அமாவாசையையொட்டி சேலம் மாவட்ட உழவர் சந்தைகளில் நேற்று காலை 202 டன் காய்கறிகள் விற்பனையானது. சேலம் மாவட்டத்தில் அம்மாப்பேட்டை, அஸ்தம்பட்டி, சூரமங்கலம், தாதகாப்பட்டி, ஆட்டையாம்பட்டி, ஆத்தூர், மேட்டூர், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், இளம்பிள்ளை, இடைப்பாடி உள்ளிட்ட இடங்களில் உழவர்சந்தைகள் உள்ளன. நேற்று மாசி அமாவாசையையொட்டி உழவர் சந்தைகளில் அகத்திகீரை, வாழை இலை, வாழைப்பழம், கத்திரிக்காய், அவரைக்காய், வெண்டைக்காய், பூசணிக்காய், பூ, வெற்றிலை உள்ளிட்டவை விற்பனை களைகட்டியது. 11 உழவர் சந்தைகளில் 1156 விவசாயிகள் கொண்டு வந்திருந்த 202 டன் 202 கிலோ காய்கறிகள் ரூ38 லட்சத்து 68 ஆயிரத்துக்கு விற்பனையானது. இக்காய்கறிகளை 43 ஆயிரத்து 190 நுகர்வோர்கள் வாங்கிச் சென்றனர். அதிகபட்சமாக சூரமங்கலம் உழவர் சந்தையில் 251 விவசாயிகள் கொண்டு வந்திருந்த 43 டன் காய்கறிகள் தி8 லட்சத்து 33 ஆயிரத்து 760க்கு விற்பனையானது. இதை 8 ஆயிரத்து 610 நுகர்வோர்கள் வாங்கிச்சென்றனர். அஸ்தம் பட்டியில் 72 விவசாயிகள் கொண்டு வந்திருந்த 12 டன் காய்கறிகள் ரூ2 லட்சத்து 44 ஆயிரத்திற்கும், தாதகாப்பட்டியில் 232 விவசாயிகள் கொண்டு வந்திருந்த 37 டன் காய்கறிகள் ரூ 6 லட்சத்து 79 ஆயிரத்திற்கும், அம்மாப்பேட்டையில் 104 விவசாயிகள் கொண்டு வந்திருந்த 17 டன் காய்கறிகள் தி3 லட்சத்து 24 ஆயிரத்திற்கும்,

ஆத்தூரில் 163 விவசாயிகள் கொண்டு வந்திருந்த 38 டன் காய்கறிகள் ரூ7 லட்சத்து 57 ஆயிரத்திற்கும் விற்பனையானது. இத்தகவலை சேலம் மாவட்ட வேளாண்மைத்துறை (வேளாண் வணிகம்) துணை இயக்குனர் சுகுமார் தெரிவித்தார்.

## துறையூர் விற்பனை கூடத்தில் 2,979 கிலோ பருத்தி ரூ.1.14 லட்சத்துக்கு ஏலம்

திருச்சி, : துறையூரில் 2,979 கிலோ பருத்தி ரூ.1.14 லட்சத்திற்கு மறைமுக ஏலம் விடப்பட்டது. திருச்சி மாவட்டத்தில் பருத்தி பயிர் மானாவாரியாக 16,453 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த வருடம் முதல் துறையூர் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் மறைமுக ஏலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வருடம் தற்போது பருத்தி அறுவடை துவங்கியுள்ளதால் நேற்று மறைமுக ஏலம் நடைபெற்றது. கோட்டாத்தூர், நடுவலூர், பெருமாள்பாளையம், கீரம்பூர், செங்காட்டுப்பட்டி, நாகலாபுரம் ஆகிய கிராமங்களில் இருந்து 10 விவசாயிகள் தங்கள் அறுவடை செய்த 17 மூட்டை பருத்தியை ஏலத்திற்கு கொண்டு வந்திருந்தனர். இதேபோல் நாமக்கல், பெரம்பலூர், துறையூர், பாடலூர் பகுதிகளில் இருந்து 4 வியாபாரிகள் கலந்து கொண்டு ஏலம் எடுத்தனர். ஒரு கிலோ பருத்தி அதிகபட்சமாக ரூ.39 க்கும், சராசரியாக ரூ.37.50க்கும் ஏலம் போனது. மொத்தம் 2,979 கிலோ பருத்தி ரூ.1,14,433க்கு ஏலம் போனது. இடைத்தரகர்களின்றி, கமிஷன் இல்லாமல் ஏலத்தில் பங்கேற்ற விவசாயிகள் அனைவருக்கும் உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது.

## திருச்செந்துறையில் ரூ.1.65 லட்சத்திற்கு வாழைத்தார் ஏலம்

திருச்சி, : ஸ்ரீரங்கம் திருச்செந்துறையில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தில் திருச்சி வேளாண் விற்பனை மற் றும் வணிகத்துறை சார் பில் செவ்வாய் தோறும் வாழைத்தார் பொது ஏலம்

விடப்பட்டு வரு கிறது. இதில் செவ்வாய்க்கிழமை நடந்த பொது ஏலத்தில் பட்டுக்கோட் டை, கிளியநல்லூர், சிறுகாம்பூர், சென்னக்கரை, செங்குடி, குணசீலம், ஆமூர், குழுமணி, லால் குடி, அந்தநல்லூர் ஆகிய கிராமங்களை சேர்ந்த 53 விவசாயிகள் பூவன், ரஸ்தாலி, கற்பூரவள்ளி, மொந்தன், பச்சநாடன், ஏலரசி ரகங் களை சேர்ந்த 2,637 வாழை த்தார்களுடன் வந்தனர். இதேபோல் பெருக மணி, சிறுகமணி, ஜீய புரம், கடியாக்குறிச்சி, புத் தூர், கே.கே.நகர், ஏர் போர்ட் ஆகிய இடங்களி லிருந்து வந்திருந்த 18 வியாபாரிகள் வாழைத்தார்களை ஏலம் எடுத்த னர். இதில் மொத்தம் ரூ.1,65,555க்கு வாழைத்தார்கள் ஏலம் எடுக்கப் பட்டது. இதில் ரஸ்தாலி தார் ஒன்று அதிகபட்சமாக ரூ.275க்கும், பூவன் ரூ.200, கற்பூரவள்ளி ரூ.185, மொந்தன் ரூ.180, பச்சநாடன் ரூ.270, ஏல ரசி ரூ.60 வீதம் ஏலம் போனது. தரமான வாழைத்தார்கள் நல்ல விலைக்கு ஏலம் போனது. இந்த வாரமும் இடைத்தரகர்களின்றி, கமிஷன் இல்லாமல் ஏலத்தில் பங்கேற்ற விவசாயிகள் அனைவருக்கும் உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது.

## <u>சிறுதானிய பயிர்களில் மதிப்புகூட்டப்பட்ட பொருள் தயாரிப்பு பயிற்சி</u>

புதுக்கோட்டை, : குன்றாண்டார்கோவில் வட்டாரத்தில் அட்மா விரி வாக்க சீரமைப்புத் திட்டத் தின் கீழ் சிறுதானிய பயிர்களில் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல் பயிற்சி நடைபெற்றது. இப் பயிற்சிக்கு வேளாண் விற்பனை மற் றும் வணிகத்துறை துணை இயக்குநர் முகம்மது அப் துல் நசீர் தலைமை வகித் தார். இப்பயிற்சியில் கலந்துகொண்ட வேளாண் விற் பனை மற்றும் வணிகத்துறை துணை இயக்குநர் முகம்மது அப்துல்நசீர் பேசுகையில், உடல் ஆரோக்கியத்திற்கு தேவையான, ஊட்டச்சத்து மிகுந்த சிறுதானிய பயிர்களை சாகுபடி செய்வதோடு, சிறு தானிய பயிர்களின் உற்பத்தியை மதிப்புக்கூட்டப் பட்ட பொருளாக மாற்றி விற்பனை செய்வதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தி விவசாயி கள் ஒவ்வொருவரும் சிறந்த தொழில்

முனைவோராக உயர்ந்திடலாம் என்றார். வேளாண் உதவி இயக்குநர் சங்கரலட்சுமி பேசுகையில், பண்ணை மகளிர் குழுக்களாக செயல் படுவதன் நன்மைகளை எடுத்து கூறி குழு பதிவேடுகள் பராமரிப்பது தொடர்பாக விளக்கமாக எடுத்து கூறினார். மேலும் வேளாண் அலுவலர்கள் கிருஷ்ணமூர்த்தி மற்றும் ஜெகதீஸ்வரி ஆகியோர் சிறுதானிய பயிர்கள் சாகுபடி செய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி பேசினர். இப்பயிற்சியில் குன்றாண்டார்கோவில் வட்டாரத்தை சேர்ந்த 40 பண்ணை மகளிர் கலந்துகொண்டனர். பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் ஒரு ஏக்கருக்கு உரிய குதிரை வாலி விதைகள் வழங்கப்பட்டது. அட்மா தொழில்நுட்ப மேலாளர் நிஷா நன்றி கூறினார். பயிற்சி ஏற்பாடுகளை அட்மா தொழில்நுட்ப வல்லுநர்கள் சுப்ரமணியன் மற்றும் பால்சாமி ஆகியோர் செய்திருந்தனர்.

## <u>தொடையூர் கிராமத்தில் நடவு துவரை சாகுபடி செயல் விளக்க திடல்</u>

அன்னவாசல், : அன்னவாசல் ஒன்றியத்தைச்சார்ந்த தொடையூர் கிராமத்தில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் விவசாயி லட்சுமி குமணன் 1 ஹெக்டர் பரப்பளவில் நடவு முறையில் துவரை சாகுபடி செய்துள்ளார். அந்த செயல்விளக்க திடலை புதுகை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ஷாஜகான் நேரில் பார்வையிட்டார். நல்ல முறையில் சாகுபடி செய்துள்ளமைக்கு விவசாயியையும், திட்டப்பணிகளை சிறப்பாக செய்தமைக்காக அன்னவாசல் வேளாண் உதவி இயக்குநர், வேளாண் அலுவலர்களுக்கு பாராட்டுதலையும் தெரிவித்து ஆலோசனைகளை வழங்கினார். மேலும், விவசாயி இளமுருகு வயலில் அரசு மானியத்தின் உதவியுடன் நிறுவப்பட்டுள்ள சூரிய சக்தியால் இயங்கும் சோலார் பம்ப்செட் செயல்பாட்டினையும் பார்வையிட்டார். ஆய்வின்போது அன்னவாசல் வட்டார வேளாண் உதவி இயக்குநர் சிங்காரம், தரக்கட்டுப்பாடு வேளாண் அலுவலர் ஆதிலட்சுமி, வேளாண் அலுவலர்கள் சுமித்ராதேவி, வேல்முருகன் மற்றும் உதவி வேளாண் அலுவலர் ராஜ்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

## தஞ்சை மாவட்டத்தில் 1.61 லட்சம் டன் நெல் கொள்முதல்

தஞ்சை, : தஞ்சை மாவட்டத்தில் 387 கொள்முதல் நிலையங்கள், 9 நடமாடும் கொள்முதல் நிலையங்களில் 1,61,539 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் முகமதுபாதுஷா தெரிவித்ததாவது: தஞ்சை மாவட்டத்தில் கடந்த 17ம் தேதி வரை 387 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், 9 நடமாடும் கொள்முதல் நிலையங்கள் மூலம் 1 லட்சத்து 61 ஆயிரத்து 539 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. திரு வள்ளூர், திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மண்டலங்களுக்கு ரயில் மற்றும் லாரிகள் வாயிலாக 11,111 டன் நெல் இயக்கம் செய்யப் பட்டுள்ளது. தஞ்சை மண்டலத்தில் உள்ள 12 திறந்தவெளி சேமிப்பு நிலையங்கள் 3 நவீன அரிசி ஆலைகளில் தினம்தோறும் 7,000 முதல் 8,000 வரை இயக்கம் செய்யப்படுகிறது. கொள்முதல் நிலையங்களுக்கு வரும் அனைத்து நெல் மூட்டைகளையும், கொள்முதல் செய்ய தேவையான பணம் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது. கொள்முதலுக்கு தேவையான சாக்குகள் கையிருப்பு உள்ளது. விவசாயிகள் தங்களிடம் உள்ள நெல்லை கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயன்பெறலாம் என்றார்.

## அரசு நெல் கொள்முதல் நிலையத்தில் விற்பனை செய்யுங்கள் விவசாயிகளுக்கு வேண்டுகோள்

கமுதி. : தமிழக அரசு நேரடி கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் தங்களது நெல்லினை அதிக விலைக்கு விற்பனை செய்து பயனடையு மாறு கமுதி வேளாண்மை உதவி இயக்குனர் கேட்டுக்கொண்டுள்ளார். ராமநாதபுரம் கலெக்டர் நந்தகுமார் உத்தரவின்பேரிலும், கலெக்டரின் நேர் முக உதவியாளர் கனக ராஜ் வழிகாட்டுதலின் படியும் மாவட்ட வேளாண் மை உதவி இயக்குனர் அறிக்கை: கமுதி பகுதி விவசாயிகள் தங்கள் வயலில் விளைந்த நெல்லினை தனியாரிடம் குறைந்த விலைக்கு

விற்பனை செய்ய வேண்டாம். வேளாண்மைத்துறை சார்பில் கமுதி கண்ணார்பட்டி வட்டார தொடக்க வேளாண்மை அலுவலகத்திலும், கமுதி அருகே டி.புனவாசல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தி லும் அமைக்கப்பட்டுள்ள அரசு நேரடி கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயன்பெறலாம். சின்ன ரக நெல் கிலோ ரூ.14.70 காசுக்கும், பொது ரக நெல் கிலே ரூ.14.10 காசுக்கும் எடுக்கப்படுகிறது. தங்களது நெல்லினை அதிக விலைக்கு விற்பனை செய்து பயனடை யுமாறு கமுதி வட்டார வேளாண்துறை அறிவுறுத்தியுள்ளது. இதற்காக கமுதி பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு ஆட்டோக்கள் மூலமாகவும், துண்டு பிரசுரங்கள் வழங்கியும் கமுதி வேளாண்மதுறை சார்பில் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது.

## <u>ராபி பருவத்தில் பயிர்காப்பீடு ரூ.5,84 கோடி</u>

விருதுநகர், : ராபி பருவத்தில் தேசிய வே ளாண் காப்பீட்டு திட்டத் தின் மூலம் பிரிமியம் செலு த்தி, கடன் பெறாத விவசாயிகளுக்கு பயிர் காப் பீட்டு தொகையாக ரூ.5.84 கோடி கிடைத்துள்ளதாக என்று விருதுநகர் மண்டல இணை ப்பதிவாளர் குருமூர்த்தி தகவல் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: விருதுநகர் மாவட்டத் தில் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் கடந்த 1.10.2012 முதல் 31.3.2013 வரை, ராபி பருவத்தில் தேசிய வேளாண் காப்பீடு திட்டத் தில் சோளம், பருத்தி, கம்பு, மக்காச்சோளம், உளு ந்து, பாசிப்பயறு, கடலை மற்றும சூரியகாந்தி ஆகிய பயிர்களுக்கு காப்பீட்டு பிரிமியம் பெறப்பட்டது. இதில் பிரிமியம் செலு த்தி கடன் பெறாத விவசாயிகளுக்கு பயிர்காப்பீட்டு நிவாரண தொகையாக ரூ.5 கோடி 84 லட்சத்து 36 ஆயிரத்து 816 கிடைத்துள்ளது. தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் பிரிமியம் செலுத்தி கடன்பெறாத விவசாயிகள் சம்பந்தப்பட்ட சங்கங்களை அணுகி நிவாரண தொகை யை பெற்றுக்கொள்ளலாம்' என அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## 13 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்

விருதுநகர், : தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் சார்பில் விருதுநகர் மாவட்டத்தில் கரீப் பருவ நெல்லை கொள்முதல் செய்யும் வகையில், 'சேத்தூர், தேவதானம், வத்திராயிருப்பு, கான்சாபுரம், மம்சாபுரம், கிருஷ்ணன்கோயில் (ரெங்கபாளையம்), நொச்சிக்குளம், உலக்குடி, நாலூர், நரிக்குடி, வேலங்குடி, வேளானேரி, காரியாபட்டி (செவல்பட்டி) ஆகிய 13 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் மையங்கள் திறக்கப்பட்டுள்ளன. கொள்முதல் நிலையங்களில் ஏ கிரேடு ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு குறைந்தபட்ச ஆதார விலையாக ரூ.1,400ம், ஊக்கத்தொகையாக ரூ.70ம், சேர்த்து ரூ.1,470 வழங்கப்படும். பொது ரக நெல்லிற்கு குறைந்தபட்ச ஆதார விலை ரூ.1,360ம், ஊக்கத்தொகையாக ரூ.50ம் சேர்த்து ரூ.1,410 வழங்கப்படும். மையங்களுக்கு கொண்டு வரும் நெல்லை அதிகபட்சமாக 17 சதவீதத்திற்கு மேல் ஈரப்பதம் இல்லாத வகை யில் பார்த்துக் கொள்ள வேண்டும். குறைந்தபட்சம் 300 மூடை இருப்பு வைத்திருப்பவர்களிடம் நடமாடும் நெல் கொள்முதல் அலுவலர்கள் விவசாயிகளின் வீட்டிற்கே வந்து கொள்முதல் செய்வர். இது தொடர்பான விவரங்களுக்கு 04562-252607 அல்லது மண்டல மேலாளர் 94421 32016 -என்ற எண் களில் தொடர்பு கொள்ளலாம்' என தெரிவித்துள்ளார்.

## சாத்தான்குளம் பகுதியில் பூத்துக்குலுங்கும் மருத்துவ குணம் நிறைந்த பிரமத்தண்டு பூக்கள் மூலிகை பண்ணை அமைக்கப்படுமா?

சாத்தான்குளம், : சாத்தான்குளம் பகுதியில் மருத்துவ குணங்கள் கொண்ட பிரமத்தண்டு செடி பூத்துக்குலுங்குகிறது. சாத்தான்குளம் பகுதி யில் வேலி மற்றும் குளக்கரை உள்ளிட்ட இடங்களில் பிரமத்தண்டு எனும் மூலிகை செடி வளர்ந்து மஞ்சள் கலரில் பூ பூத்து அழகாக காட்சி தருகிறது. இந்த செடி யின் இலை, பால், வேர், விதை ஆகியவை பல நோய் களை எளிதில் குண மாக்க வல்லதாக மூலிகை மருத்துவர்கள்

தெரிவித்துள்ளனர். ஆனால் தற்போது ஆங்கில மருத்துவத்தின் மோகத்தால் இயற்கை மருத்துவம் நலிவடைந்து வருவதாகவும் குற்றம் சாட்டியுள்ளனர் இது குறித்து சாத்தான் குளம் மூலிகை மருத்துவர் செல்வராஜ் மதுரம் கூறியதாவது: இந்த பிரமத்தண்டு செடி காம்பில்லாமல் பல மடல்களான உடைந்த கூரிய முள்களுள்ள இலைகளையும் பளிச்சிடும் மஞ்சள் நிறப் பூக்களையும் கடுகு போன்ற விதைகளையும் உடைய நேராக வளரும் சிறு செடி. இச்செடியானது தரிசு மற்றும் ஆறு, மற்றும் குளக்கரை, சாலையோரங்களில் தானாக வளர்கிறது. இதன் இலை, பால், வேர், விதை ஆகியவை மருத்துவப் பயனுடையதாக உள்ளது. இவை சொறி, சிரங்கு நீக்கவும், தேள், பாம்புக்கடி விஷம் நீக்கும் அருமருந்தாக உள்ளது. மேலும், கண் வலி, இருமல், நுரையீரல் சளி, பல் சொத்தைகள் போன்ற நோய்களையும் குணமாக்கக் கூடியது. ஆனால் தற்போது ஆங்கில மருத்துவத்தை மக்கள் அதிகம் நாடி செல்வதால் இந்த மருத்துவ குணம் கொண்ட செடி காட்டிலேயே காய்ந்து போகிறது. இப்படி சாத்தான் குளம் பகுதியில் பல மருத்துவ குணங்கள் கொண்ட செடிகள் வெறும் காட்சி பொருளாகவே உள் ளது. ஆதலால் சாத்தான் குளம் பகுதியில் அரசு அதிகாரிகள் ஆய்வு செய்து கோவை மாவட்டத்தில் உள்ளது போல் மூலிகை பண்ணை அமைக்க வேண் டும். மேலும் அரசு சார்பில் மூலிகை செடிகள் கண் காட்சி அமைத்து இன்றைய மக்களுக்கு விளக்க வேண் டும். இதன்மூலம் கிராமங்கள் மட்டுமில்லாமல் நகரங்களிலும் மூலிகை மருத்துவம் மூலம் மக்கள் பயனடைய முடியும் என்றார்.

## <u>கோழிப்போர்விளை வட்டாரத்தில் நடமாடும் மண் பரிசோதனை நிலைய வாகனம் வருகை</u>

நாகர்கோவில், :குமரி மாவட்ட கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு: நடமாடும் மண் பரி சோதனை நிலைய வாகனம் கோழிப்போர்விளை வட்டாரத்தில் வரும் 23ம் தேதி பரைக்கோடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியிலும், 24ம் தேதி

வேளிமலை கிராம நிர்வாக அலுவலகத்திலும், 25ம் தேதி கோதநல்லூர் ஊராட்சி அலுவலகத்தி லும், 26ம் தேதி மணக்கரை அரசு படிப்பகத்திலும், 27ம் தேதி முட்டைக்காடு தொடக்க வேளா ண்மை கூட்டுறவு வங்கி யிலும் பயணம் மேற் கொண்டு மண் ஆய்வு பணி மேற்கொள்ள உள் ளது. எனவே விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளு மாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மாவட்டம் முழுவதும் மார்ச் 1-ந்தேதி முதல் 4 லட்சத்து 60 ஆயிரம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட நடவடிக்கை**

தர்மபுரி மாவட்டம் முழு வதும் மார்ச் 1-ந்தேதி முதல் 4 லட்சத்து 59 ஆயிரத்து 100 கால் நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுவருகிறது.

ஒருங்கிணைப்புகூட்டம்

தர்மபுரி மாவட்டத்தில் கோமாரி நோய் வராமல் தடுப் பது மற்றும் தடுப்பூசி விழிப் புணர்வு குறித்த ஒருங்கிணைப்பு கூட்டம் தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. கூட் டத்திற்கு கலெக்டர் விவே கானந்தன் தலைமை தாங்கி னார். இதில் கால்நடை பரா மரிப்புத்துறை, பால்வளத் துறை, புது வாழ்வு திட்டம், மகளிர் திட்டம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கலெக்டர் விவேகானந்தன் பேசிய தாவது:- , தர்மபுரி மாவட்டத்தில் மொத் தம் 3 லட்சத்து 59 ஆயிரத்து 100 பசு மற்றும் எருமை மாடு கள் உள்ளன. வருகிற மார்ச் 1-ந்தேதி முதல் 21-ந்தேதி வரை சம்பந்தப்பட்ட அனைத்து துறையினரும் ஒருங்கிணைந்து மாவட்டத்தில் உள்ள அனைத்து பசு மற்றும் எருமை இனங்களுக்கு

எவ்வித விடு பாடின்றி 100 சதவீதம் தடுப்பூசி போட நடவடிக்கை மேற் கொள்ளவேண்டும்.

விளம்பரப்படுத்தவேண்டும்

இதுதொடர்பாக கிராமப்புற விவசாயிகளிடம் விழிப் புணர்வு ஏற்படுத்தும் வகையில் வருகிற 25-ந்தேதி மாவட்டத் தில் உள்ள 251 கிராம ஊராட்சி களிலும் சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற உள்ளது.அந்த கிராம சபை கூட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை யினர் கலந்து கொண்டு கோமாரி நோய் தடுப்பூசியின் முக்கியத்துவம் மற்றும் அனைத்து கால்நடைகளுக்கும் விடுபாடின்றி தடுப்பூசி போடு வதின் அவசியம் பற்றி விளக்கிக் கூறி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இது தொடர்பாக தர்மபுரி மாவட்டத்தில் உள்ள 63 கால் நடை மருந்தகங்கள், 3 கால் நடை மருத்துவமனைகள், 8 ஊராட்சி ஒன்றிய அலுவல கங்கள், 138 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், 298 பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், 251 கிராம ஊராட்சி மன்ற அலுவலகங் கள், 1330 அங்கன்வாடி மையங் கள் ஆகியவற்றில் பேனர்கள் மற்றும் ஸ்டிக்கர்கள் வைத்து கோமாரி நோய் தடுப்பூசி பற்றி விளம்பரப்படுத்தவேண்டும்.

ஒன்றியஅளவில்

இன்று (வெள்ளிக்கிழமை) தர்மபுரி மாவட்டத்தில் உள்ள 8 ஊராட்சி ஒன்றிய அலு வலகங்களிலும் ஒன்றிய அள வில் கால்நடை உதவி மருத்து வர்கள், சுய உதவி குழுக்கள், புதுவாழ்வு திட்ட உறுப்பினர் கள,¢ மகளிர் திட்ட உறுப்பினர் கள், அங்கன்வாடி பணி யாளர்கள் ஆகியோர்களை கொண்டு ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்தி கோமாரி நோய் தடுப்பூசி பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் விவரங்களுக்கு மாவட்ட கலெக்டர் அலுவல கத்தில் செயல்படும் இலவச தொலைபேசி எண் 1077-க்கு தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு கலெக்டர் கூறினார்.

விளைச்சல் அதிகரிப்பால் புளி பதப்படுத்தும் தொழில் விறுவிறுப்பு



புளி விளைச்சல் அதிகரிப் பால் தர்மபுரி மாவட்டத் தில் புளி பதப்படுத்தும் தொழில்விறுவிறுப்புஅடைந்துள்ளது.

புளிஉற்பத்தி

தர்மபுரி மாவட்டத்தில் உள்ள முக்கிய தொழில்களில் ஒன்றாக புளி பதப்படுத்தும் தொழில் உள்ளது. இந்த தொழிலில் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் சுமார் 50 ஆயிரம் பணியாளர்கள் ஈடுபட்டு வருகிறார் கள். தர்மபுரி, பென்னாகரம், பாப்பாரப் பட்டி, பாலக்கோடு, காரிமங் கலம் உள்ளிட்ட பகுதிகளில் புளிபதப்படுத்தும் தொழில் அதிக அளவில் நடந்து வரு கிறது. இவ்வாறு பதப்படுத்தப் படும் புளியை சுமார் 2 ஆயிரம் வணிகர்கள் சேலம் லீ பஜார், ஈரோடு புளிமார்க்கெட் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு விற்பனைக்காக கொண்டு செல்கிறார்கள். கடந்த சில ஆண்டுகளாக புளி உற்பத்தி வழக்கத்தை விட குறைந்தது. இதனால் புளியின் விலை அதிகரித்தது. இதன் காரணமாக கூட்டுறவு சங்கங் கள் மூலம் புளி விற்பனை செய்யப்பட்டது. இந்த நிலை யில் இந்த ஆண்டு இந்தியா முழுவதும் புளி விளைச்சல் அதிகரித்து உள்ளது. குறிப்பாக ஆந்திரா, கர்நாடகா மற்றும் தமிழகத்தில் தர்மபுரி, கிருஷ்ண கிரி மாவட்டங்களில் புளி விளைச்சல் அமோகமாக உள்ளது.

விலைகுறையவாய்ப்பு புளி விளைச்சல் அதிகரித்து உள்ளதால் தர்மபுரி மாவட்டத் தில் புளி பதப்படுத்தும் தொழில் தற்போது விறுவிறுப் படைந்துள்ளது. வெளிமாநி லங்களில் இருந்து வணிகர்கள் ஓட்டுடன் கூடிய புளியை கொள்முதல் செய்யும் பணி யில் தீவிரமாக ஈடுபட்டு வரு கிறார்கள். இவ்வாறு கொள் முதல் செய்த புளியில் இருந்து கொட்டைகள்

மற்றும் ஓடுகள் அகற்றப் பட்ட பின் களங்களில் உலர்த்தும் பணியில் தொழி லாளர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள். கடந்த ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டு புளி விளைச்சல் அதிகரித்து இருப்பதால் புளி யின் விலை குறைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தரத்திற்கு ஏற்றவகையில் ரூ.70 முதல் ரூ.80 வரை விற்பனை செய்யப் படும் ஒரு கிலோ புளியின் விலை இந்த ஆண்டு ரூ.50-க்கு கீழ் குறைய வாய்ப்பு ஏற்பட்டுள் ளது. இதுதொடர்பாக தர்ம புரி மாவட்ட புளி வணிகர்கள் சங்க தலைவர் பாஸ்கர் கூறுகையில், புளி உற்பத்தி அதிகரித்து இருப்பதால் தர்ம புரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் புளி ஏலம் நடத்த வேண்டும் என்று தெரிவித் தார்.

## நாமக்கல்லில் 8 ஆயிரம் மூட்டை பருத்தி ரூ.1 கோடியே 30 லட்சத்துக்கு ஏலம்



நாமக்கல்லில் 8 ஆயிரம் மூட்டை பருத்தி ரூ.1 கோடியே 30 லட்சத்துக்கு ஏலம்போனது.

பருத்திஏலம்

நாமக்கல் - திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று சங்க தலைவர் தென்னரசு மற்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள் முன்னிலையில் பருத்தி ஏலம் நடந்தது. இந்த பருத்தி ஏலத்துக்கு நாமக்கல், புதுச்சத்திரம், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், பவித்திரம், வேலகவுண்டம்பட்டி என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் 8 ஆயிரம் மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

ரூ.1.30கோடிக்குவிற்பனை

இந்த பருத்தி மூட்டைகள் ஏறத்தாழ ரூ.1 கோடியே 30 லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச்.ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.3 ஆயிரத்து 800 முதல் ரூ.4 ஆயிரத்து 500 வரைக்கும், டி.சி.எச்.ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 200 முதல் ரூ.4 ஆயிரத்து 940 வரைக்கும், சுரபி ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 300 முதல் ரூ.4 ஆயிரத்து 880 வரைக்கும் ஏலம் போனது. இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, கொங்கணாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர்.

## <u>விவசாயத்தில் நவீன கருவிகள் வந்தாலும் மவுசு குறையாத கீரமங்கலம் மண்வெட்டிகள்</u>



விவசாயத்திற்கு நித்தம் ஒரு புத்தம் புதிய கருவிகள் வந்தாலும் கீரமங்கலம் மண்வெட்டிகளுக்கு மவுசு குறையாமல் உள்ளது.

நவீனகருவிகள்

முந்தைய காலங்களில் விவசாயத்திற்கு மாடுகளின் எருக்களையும் குப்பைகளையும் இலை, தழைகளையும் போட்டு காளை மாடுகள் பூட்டி மரக்கலப்பைகளால் மண்ணை ஆழமாக உழுது விவசாயம் செய்து கொண்டிருந்தனர். காலம் மாறி தற்போது உழுவதற்கு டிராக்டர் போன்ற நவீன எந்திரங்கள் வந்தது போல அடுத்தடுத்து மனித உழைப்பை குறைக்கும் விதமாக பயிர்களை நடவு செய்யவும், களை பறிக்கவும், மருந்து தெளிக்கவும் நவீன எந்திரங் கள் வந்து விட்டதால் மனித உழைப்பு குறைந்து போனது. மழையின்மையும் விவசாயத்தை குறைக்க தொடங்கிவிட்டது. அதனால் கிராமங்களில் விவசாயத்தை நம்பி இருந்த இளைஞர்கள் மாற்று வேலைகளை தேடி நகரங்களுக்கு செல்ல தொடங்கி

விட்டனர். விவசாயத்திற்கு எத்தனையோ நவீன கருவிகள் வந்தாலும் வரப்புகளை சரி செய்யவும், தண்ணீர் பாய்ச்சவும் பெரிதும் பயன்படும் மண்வெட்டிகளுக்கு மட்டும் நவீன கருவிகள் இன்னும் வரவில்லை.

மவுசுகுறையாதமண்வெட்டிகள்

புதுக்கோட்டை மாவட்டத்தில் கீரமங்கலம் மண்வெட்டி என்றால் அதற்கு தனி மவுசு உண்டு. கீரமங்கலத்தில் தயாரிக்கப்படும் மண்வெட்டி களை வைத்து விவசாய வேலை செய்யும் போது களைப்பு தெரியாது, மூட்டு வலிகள் வருவதில்லை என்று சொல்லும் விவசாயிகள் விவசாய காலங்களில் மண்வெட்டி வாங்குவதற்காக கீரமங்கலம் நோக்கி வருவது வழக்கமாக உள்ளது. வேளாண்மை துறையில் இரும்பு குழாயில் மண்வெட்டி தயாரித்து கொடுத்தாலும் கீரமங்கலத்தில் மரக்கழியில் தயாரிக்கப்படும் மண்வெட்டியே நல்லது மேலும் ஒரு மண் வெட்டி ரூ.500 வரை விற்பனை செய்கிறோம் என்கிறார்கள் மண்வெட்டி தயார் செய்யும் தொழிலாளர்கள்.